தமிழக காவல்துறையில்

12 ஆய்வாளர்கள் டி.எஸ்.பி.க்களாக பதவி உயர்வு

பணியிடம் ஒதுக்கப்பட்டது

சென்னை, மார்ச் 12: தமிழக காவல்துறையில் 12 காவல் ஆய்வாளர்கள் காவல் துணைக் கண்காணிப்பாளர்களாக (டிஎஸ்பி) பதவி உயர்வு பெற்றனர்.

தமிழக காவல்துறைக்கு 1997 ஆம் ஆண்டு 536 காவல் உதவி ஆய்வாளர்கள் 3 பிரிவுகளில் தேர்வு செய்யப்பட்டனர். இவர்கள் காவல் ஆய்வாளர்களாக பணிபுரிந்து வந்தனர். இவர்கள் 2017ஆம் ஆண்டு காவல் துணைக் கண்காணிப்பாளர்களாக பதவி உயர்வு பெறுவதற்குரிய பணிமூப்பு அடைந்துவிட்ட நிலையில், பதவி உயர்வு வழங்கப்படாமல் இருந்து வந்தது.

ஏனெனில் தமிழக காவல்துறையில் டிஎஸ்பி பணியிடங்கள் காலியாக இல்லாததால், பதவி உயர்வு வழங்குவதில் சிக்கல் நீடித்தது. இந்நிலையில் 2019ஆம் ஆண்டு முதல் கட்டமாக 111 பேர் பதவி உயர்த்தப்பட்டனர்.

இதன் பின்னர், படிப்படியாக மீதி இருப்பவர்கள் பதவி உயர்வு பெற்றனர். அதேவேளையில் சிலர் பதவி உயர்வு பெறாமலேயே ஓய்வும் பெற்றனர். 1997ஆம் ஆண்டு காவல்துறையில் எஸ்ஐயாக சேர்ந்து, பணியில் இருக்கும் காவல் ஆய்வாளர்கள் அனைவரும் டிஎஸ்பியாக பதவி உயர்வு பெற்று விட்ட நிலையில், 12 காவல் ஆய்வாளர்கள் பதவி உயர்வு பெறாமல் இருந்தனர்.

இந்நிலையில் அந்த 12 காவல் ஆய்வாளர்களையும் டிஎஸ்பிக்களாக பதவி உயர்வு செய்தும், பணியிடம் ஒதுக்கியும் தமிழக அரசின் உள்துறை கூடுதல் தலைமைச் செயலர் தீரஜ் குமார் உத்தரவிட்டுள்ளார்.

இதில் முக்கியமாக தேனி மாவட்டம் அல்லிநகரம் காவல் நிலைய ஆய்வாளர் சி.இளரவசு, தென்காசி மாவட்டம் குற்ற ஆவண காப்பக பிரிவு டிஎஸ் பியாகவும், ராமநாதபுரம் மாவட்டம் பாம்பன் காவல் நிலைய ஆய்வாளர் பி.காந்தி கன்னியாகுமரி மாவட்ட சமூக நீதி மற்றும் மனித உரிமைப்பிரிவு டிஎஸ்பியாகவும், தூத்துக்குடி மாவட்டம் கடம்பூர் காவல் நிலைய ஆய்வாளர் எம்.கண்ணன் தூத்துக்குடி மாவட்டகுற்றப்பிரிவு டிஎஸ்பியாகவும் பதவி உயர்வு வழங்கப்பட்டு, பணியிடம் ஒதுக்கப்பட்டுள் ளது.

இவ்வாறு மொத்தம் 12 பேருக்கு பதவி உயர்வு வழங்கப்பட்டு, பணியிடம் ஒதுக்கப்பட்டிருப்பதாக காவல்துறையினர் தெரிவித்தனர்.

சிலிண்டர் தட்டுப்பாடு வந்தாலும்

மாணவர் விடுதிகளில் உணவு தட்டுப்பாடு ஏற்படாது

அமைச்சர் அன்பில் மகேஷ் உறுதி

சென்னை, மார்ச். 12 சிலிண்டர் தட்டுப்பாட்டால் தமிழகத்தில் உள்ள மாணவர் விடுதிகளில் உணவு தட்டுப்பாடு ஏற்படாது என அமைச்சர் அன்பில் மகேஷ் தெரிவித்துள்ளார். எரிவாயு சிலிண்டர் தட்டுப்பாடு கடுமையாக நிலவி வரும் நிலையில் ஓட்டல்கள், உணவகங்கள் போன்ற வணிக நிறுவனங்களையும் பெரிதும் பாதித்து வருகிறது. குறிப்பாக, வணிக ரீதியான சிலிண்டர் விநியோகத்தில் ஏற்பட்டுள்ள குறைபாடு காரணமாக பல இடங்களில் உணவு தயாரிப்பு பாதிக்கப்பட்டுள்ளது. இந்த சூழலில், அரசு மாணவர் விடுதிகளில் உணவு தட்டுப்பாடு ஏற்படாது என்று பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி தெளிவாகக் கூறியுள்ளார். மத்திய கிழக்கு நாடுகளில் ஏற்பட்ட பதற்றம் மற்றும் கச்சா எண்ணெய் விலை உயர்வு காரணமாக, வீட்டு உபயோக சிலிண்டர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது.

வணிக சிலிண்டர் விநியோகத்தை கட்டுப்படுத்தியுள்ளது. இதனால் தமிழகத்தில் உள்ள ஓட்டல்கள், உணவகங்கள் மற்றும் பிற வணிக அமைப்புகளுக்கு சிலிண்டர் கிடைப்பது கடினமாக உள்ளது.

பல உணவக உரிமையாளர்கள் இதனால் தங்கள் நிறுவனங்களை மூடும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர், உணவு விலைகள் உயரும் அபாயம் உள்ளது என எச்சரித்துள்ளனர். இந்நிலையில், கல்லூரி விடுதிகள், அரசு விடுதிகள் போன்றவற்றில் தங்கும் மாணவர்களுக்கு உணவு தயாரிப்பு பாதிக்கப்படலாம் என்ற அச்சம் எழுந்துள்ளது. இது குறித்து அமைச்சர் அன்பில் மகேஷ் கூறியதாவது:–

அரசு நடத்தும் பள்ளி மற்றும் கல்லூரி விடுதிகளில் தேவையான எரிவாயு சிலிண்டர்கள் எந்த தட்டுப்பாடும் இல்லாமல் கிடைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது, மாணவர்களின் உணவு தயாரிப்பு மற்றும் வழங்கல் எந்த பாதிப்பும் இல்லாமல் தொடரும். அரசின் முன்னுரிமை திட்டங்களில் மாணவர்களின் ஊட்டச்சத்து மற்றும் கல்வி நலன் மிக முக்கிய இடம் பெறுவதால், இத்தகைய அத்தியாவசிய தேவைகள் தடையின்றிநடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு அவர் கூறினார்.

தேனியில்

துணை ராணுவ படையினர் போலீசார் அணிவகுப்பு

கூடுதல் எஸ்.பி. கொடி அசைத்து துவக்கி வைத்தார்

தேனி, மார்.12– தேனி மாவட்டத்தில் உள்ள ஆண்டிபட்டி பெரியகுளம் போடி கம்பம் ஆகிய 4 சட்ட மன்ற தொகுதிகளுக்கும் 2026 சட்டமன்றத் தேர்தல் நடை பெற உள்ளது.

இதற்காக மாவட்டத்தில் அமைதியான முறையிலும் பாதுகாப்பாக தேர்தல் நடத்திட தேர்தல் ஆணையத்தின் உத்தரவின் படி தெலுங்கானாவில் இருந்து சி 181 மத்திய துணை ராணுவ படையினர் கம்பனி கமாண்டர் ஸ்ரீகுமார் தலைமையில் 57 பேர் ஏகே பிப்டி செவன் துப்பாக்கிகளுடன் தேனி மாவட்டத்திற்கு வந்துள்ளனர்.

இவர்கள் தேனி அருகே யுள்ள கம்மவார் தனியார் கல்லூரியில் தங்கி தேர்தல் பாதுகாப்பு பணியில் ஈடுபட உள்ளனர்.

இந்த நிலையில் தேனி மாவட்ட எஸ்பி சினேஹா பிரியா ஆலோசனையின் பேரில் நேற்று மாலை தேனி அல்லிநகரத்தில் பெரியகுளம் செல்லும் சாலையில் உள்ள சாலை பிள்ளையார் கோவில் முன்பாக அணிவகுப்பு பேரணி ஏடிஎஸ்பி மகேஷ் கொடி அசைத்து துவக்கி வைத்தார்.

இப்பேரணியில் துணை ராணுவ படையினர் கையில் துப்பாக்கி மற்றும் லத்தியை பிடித்த வாறும், இவர்களுடன் போலீசாரும் இணைந்து பேரணியாக சென்றனர். பேரணி, நேரு சிலை வழியாக, தேனி மதுரை தேசிய நெடுஞ்சாலையில் உள்ள பங்களா மேட்டில் சுமார் 3 கிலோ மீட்டர் தூரத்திற்கு பேரணியாக சென்று விழிப்புணர்வை ஏற்படுத்தி நிறைவு செய்தனர்.

இந்நிகழ்ச்சியில் ஏடிஎஸ்பி ஜெரால்டு அலெக்சாண்டர், ஏஎஸ்பி சீதாலட்சுமி, டிஎஸ்பிகள் 4, இன்ஸ்பெக்டர்கள் 4 எஸ்ஐகள், காவலர்கள், போக்குவரத்து காவலர்கள் மற்றும் ஆயுதப்படை போலீசார் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

முன்னாள் வி.ஏ.ஓ. வீட்டின் பூட்டை உடைத்து

ரூ.2.37 லட்சம் மதிப்புள்ள பொருட்கள் திருடி வழக்கில் 2 பேர் கைது

தேனி அருகே போலீசார் நடவடிக்கை

தேனி, மார்ச்.12– தேனி மாவட்டம் வீரபாண்டி அருகே ஸ்ரீரங்கபுரத்தில் இருந்து விசிபுரம் செல்லும் ரோட்டில் வீடு கட்டி குடியிருந்து வருபவர் ராமசாமி மகன் முதியவர் அய்யப்பன் (75). இவர் முன்னாள் கிராம நிர்வாக அலுவலராக வேலை பார்த்து வந்தவர், கடந்த 2013 ஆம் ஆண்டு ஓய்வு பெற்று, வீட்டில் இருந்து வருகிறார்.

இவரது மகள் சென்னையில் உடல்நிலை சரியில்லாமல் இருப்பதால் அடிக்கடி தனது, மனைவியுடன் சென்னை சென்று வந்துள்ளார்.

இந்த நிலையில் கடந்த மார்ச். 7–ந் தேதி அன்றும் வீட்டை பூட்டிவிட்டு பக்கத்தில் உள்ள உறவினர் வீட்டில்சாவியைகொடுத்துவிட்டு சென்னைக்கு சென்றவருக்கு, இங்கு சாவியை வாங்கியவர் போன் மூலமாக வீட்டின் கதவுகள் திறந்து கிடப்பதாக மார்ச்.7 அன்று தகவல் தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து முதியவர் வீட்டிற்கு வந்து பார்த்தபோது, வீட்டின்மெயின் கேட் பூட்டு, கதவின் பூட்டுகள் உடைக்கப்பட்டு வீட்டில் இருந்த 4 பவுன் எடை கொண்ட கோதுமை மாடல் தங்க செயின் 1, 2 கிராம் எடை கொண்ட தங்க காயின் 2, ஒரு அடி உயரமுள்ள வெள்ளி குத்துவிளக்கு 2, 43 இன்ச்டி.வி என மொத்தம் ரூ.2,37,500 மதிப்புள்ள பொருட்களை மர்ம நபர்கள் யாரோ திருடி சென்று விட்டதாக முதியவர் வீரபாண்டி காவல் நிலை யத்தில் புகார் அளித்தார்.

இப் புகாரின் பேரில் போலீசார் வழக்கு பதிவு செய்து மர்ம நபர்களை தேடி வந்த நிலையில் அல்லிநகரத்தைச் சேர்ந்த மாணிக்கம் பிள்ளை மகன் சோனி என்ற சோனி ராஜா (59) மற்றும் கமுதியை சேர்ந்த மணி பாரதி (22) ஆகியோரை கைது செய்தனர். பின்னர் அவர்களை நேற்று நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினர்.

பழனி அருகே

ரெயிலில் அடிபட்டு முதியவர் பலி

பழனி, மார்ச்.12– பழனி அருகே உள்ளது பெத்தநாயக்கன்பட்டி, இங்கு ரயில்வே தண்டவாளம் பகுதியில், முதியவர் ஒருவர் இறந்து கிடப்பதாக பழனி ரயில்வே போலீசுக்கு தகவல் கிடைத்தது. அதன் பேரில் சப் இன்ஸ்பெக்டர் பாஸ்கரன் தலைமையில், போலீசார் சம்பவ இடத்திற்கு சென்று பார்த்தனர். அப்பொழுது 60 வயது உடைய முதியோர் ஒருவர் இறந்து கிடந்தார். அவர் வெள்ளை நிற சட்டை அணிந்து இருந்தார்.

ஆனால் அவர் யார் எந்த ஊர் என்ற விவரம் தெரியவில்லை. விசாரணையில் கோவை டு மதுரை எக்ஸ்பிரஸ் ரயிலில் அவர் அடிபட்டு, இறந்திருக்கலாம் என்று தெரியவந்தது. அவரது உடலை கைப்பற்றி, பழனி அரசு மருத்துவமனைக்கு பிரேத பரிசோதனைக்காக அனுப்பி வைத்தனர்.

இது பற்றி பழனி ரயில்வே போலீசார், வழக்கு பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்.

OMKARA ஓம்காரா அசெட்ஸ் ரீகன்ஸ்ட்ரக்ஷன் பிரைவேட் லிமிடெட்

காா்ப்பரேட் அலுவலகம்: கோஹுநிஹுா் சதுக்கம், 47வது தளம், என்.சி.கேல்கா் மாா்க், ஆா்.ஜி.கட்காரி சௌக்,தாதா் (மேற்கு), மும்பை - 400028 **|தொலைபேசி:**022-26544000 **மின்னஞ்சல்:** mumbai@omkaraarc.com www.omkaraarc.com **|CIN:** U67100TZ2014PTC020363

[இணைப்பு - IV-A] [விதி 8 (6) r/w விதி 9(1)க்கான விதிமுறைகளைப் பார்க்கவும்]
அசையா சொத்து விற்பனைக்கான மின்-ஏலத்திற்கான பொது அறிவிப்பு
மின்-ஏல தேதி:02.04.2026

நிதி சொத்துக்களின் பத்திரமயமாக்கல் மற்றும் மறுகட்டமைப்பு மற்றும் பாதுகாப்பு வட்டி அமலாக்கச் சட்டம், 2002 இன் கீழ் அசையா சொத்துக்களை விற்பனை செய்வதற்கான மின்-ஏல விற்பனை அறிவிப்பு, பாதுகாப்பு வட்டி (அமலாக்க) விதிகள், 2002 இன் விதி 8 (6) உடன் விதி 9(1) உடன் படிக்கப்படுகிறது.

பொதுவாக பொதுமக்களுக்கு, குறிப்பாக கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடன் வாங்குபவர் மற்றும் உத்தரவாததாரர்களுக்கு, கீழே குறிப்பிடப்பட்டுள்ள அசையா சொத்துக்கள், பாதுகாக்கப்பட்ட கடனாளியிடம் அடமானம் வைக்கப்பட்ட/வசூலிக்கப்பட்ட **குறியீட்டு** உரிமையாய் எடுக்கப்பட்டுள்ளன, இதன் அடையாளத்தை இதன் மூலம் பொதுமக்களுக்கு அறிவிக்கப்படுகிறது **ஓம்காரா அசெட்ஸ் ரீகன்ஸ்ட்ரக்ஷன் பிரைவேட் லிமிடெட் ("OARPL") இன் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி (ஓம்காரா PS 25/2019-20 டிரஸ்டீயின் அறங்காவலராக செயல்படுகிறது). OARPL** என்பது நிறுவனங்கள் சட்டம், 1956 இன் கீழ் இணைக்கப்பட்ட ஒரு நிறுவனமாகும், மேலும் இந்தியா ரிசர்வ் வங்கியில் ஒரு சொத்து மறுசீரமைப்பு நிறுவனமாக பதிவு செய்யப்பட்டுள்ளது மற்றும் அதன் பதிவு செய்யப்பட்ட அலுவலகம் 9, M.P நகர், 1வது தெரு, கோர்க்கு நகர் விரிவாக்கம், நிருப்பூர் 641607 மற்றும் கோஹுநிஹுா் சதுக்கம், 47வது மாடி, N.C. கேல்கா் மாா்க், ஆர்.ஜி. கட்கரி சௌக், தாதா் (மேற்கு), மும்பை - 400028 இல் உள்ள காா்ப்பரேட் அலுவலகத்தைக் கொண்டுள்ளது. மேலும், ஒதுக்கீட்டு வங்கியான ஸ்டேட் பாங்க் ஆஃப் இந்தியா, 20.09.2016 தேதியிட்ட ஒப்படைப்புப் பத்திரங்களின் மூலம் **M/s. திருப்பூர் சூர்யா ஹைடெக் அப்பரல் பிரைவேட் லிமிடெட்டின் முழு நிதுவையில் உள்ள கடனையும் ஒதுக்கியது. லிமிடெட் நிறுவனத்திற்கு உத்தரவாதம் அளிக்கப்பட்டது 1. திரு. கே. குப்புசாமி 2. திருமதி. கே. ராதாம்பிகை 3. திரு. கே. கார்த்திக் 4. திரு. எஸ். ஹரிஹரசிவசுப்பிரமணியன் 5. திருமதி. கே. சூரியா 6. திருமதி. கே. பாலநாதன்** மற்றும் அடிப்படை பத்திரங்களுடன் OARPL நிறுவனத்திற்கு முறையே ஓம்காரா PS 25/2019-20 அறக்கட்டளையின் அறங்காவலராக செயல்படுகிறது.

ஒதுக்கீட்டு ஒப்பந்தத்தின்படி, OARPL ஒதுக்கீட்டு வங்கிகளின் காலணிகளில் துழைத்துள்ளது மற்றும் நிதுவைத் தொகையை வசூலிக்கவும் பத்திரங்களைச் செயல்படுத்தவும் உரிமை உண்டு. பாதுகாக்கப்பட்ட சொத்துக்கள் SARFAESI சட்டத்தின் பிரிவுகள் 13 (2) மற்றும் (4) இன் கீழ் உரிமைகள் மற்றும் அதிகாரங்களைப் பயன்படுத்தி விற்கப்படும்: **"எங்கே இருக்கிறதோ அப்படியே", "இருப்பது அப்படியே", "எது இருக்கிறதோ அப்படியே" மற்றும் "எதுவும் இல்லை" என்ற தலைப்பில் 02-04-2026 அன்று மதியம் 12:00 மணிக்கு** (ஏலங்களை சமர்ப்பிப்பதற்கான கடைசி தேதி மற்றும் நேரம் **30-03-2026 மதியம் 05:00 மணிக்குள்**), OARPL மற்றும் அதன் கூட்டமைப்பு உறுப்பினர்கள் பாதுகாக்கப்பட்ட கடனாளிகளாக, கீழே காட்டப்பட்டுள்ள கடன் வாங்குபவர் மற்றும் உத்தரவாததாரர்களிடமிருந்து செலுத்த வேண்டிய தொகையை அந்தந்த நெடுவரிசையில் மீட்டெடுப்பதற்காக.

அந்தந்த சொத்தின் இருப்பு விலை மற்றும் அர்னெஸ்டினா பண வைப்புத்தொகை அந்தந்த நெடுவரிசையில் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது. அசையாச் சொத்து மற்றும் அறிவிப்பட்ட வில்லங்கங்கள் (ஏதேனும் இருந்தால்) பற்றிய விளக்கத்துடன் கடன் வாங்குபவர்கள் மற்றும் அடமானக்காரர்களின் விளக்கம் பின்வருமாறு: -

கடன் வாங்கியவர் மற்றும் உத்தரவாதம் அளித்தவர்களின் பெயர்	31.12.2025 அன்று நிலுவையில் உள்ள நிலுவைத் தொகை ரூ.	தேவை அறிவிப்பு தேதி	குறியீட்டு உடைமை தேதிகள்
கடன் வாங்கியவர்: M/s. திருப்பூர் சூர்யா ஹைடெக் அப்பரல் பிரைவேட் லிமிடெட். லிமிடெட் (கலைக்கப்பட்டது) **உத்தரவாததாரர்கள்:** 1. திரு. கே. குப்புசாமி 2. திருமதி. கே. ராதாம்பிகை 3. திரு. கே. கார்த்திக் 4. திரு. எஸ். ஹரிஹர சிவசுப்பிரமணியன் 5. திருமதி. கே. சூரியா 6. திருமதி. கே. பாலநாதன்	ரூ.4,32,06,44,144/- (நாலாயிரத்து மூப்பத்திரண்டு கோடியே நாற்பத்து நான்காயிரத்து நூற்று நாற்பத்து நான்கு மட்டும்)	20.09.2016	07.01.2017

லாட் எண்.	அசையாச் சொத்தின் விளக்கம்	அடமான தாரர்	பரப்பளவு	ஆய்வு தேதி & நேரம்	இருப்பு விலை (ரூ. லட்சம்)	EMD (ரூ. லட்சம்)	ஏல உயர்வு தொகை (ரூ. லட்சம்)
1.	நிலம் தாங்கி SF எண். 663, TS எண். 1163/28/2, பிளாக் எண். 8,பிள்ளையார் கோவில் தோட்டா வேடுகல், தொட்டிப்பாளையம் கிராமம் (சூர்யா நகர்),நிருப்பூர் தாலுகா மற்றும் மாவட்டம் அறியப்பட்டவைஉரிமைகள் வணிக விற்பனை வரித் துறை, ரூ.2,89,82,142/- நிலுவையில் உள்ள வரிக்கு, சம்பந்தப்பட்ட சொத்தின் மீது ஒரு வில்லங்கத்தை உருவாக்க துணைப் பதிவாளர் அலுவலகத்திற்கு ஒரு கோரிக்கை கடிதத்தை அனுப்புகிறது	திரு. கே. குப்புசாமி	0.86 சென்ட் 24,024 சதுர அடி கட்டிடம் கொண்ட நிலத்தை அளவிடுதல்.	23-03-2026 காலை 11:00 மணி முதல் மதியம் 12:00 மணி வரை	334	33.40	5

ஏல தேதி & நேரம்: 02.04.2026 மதியம் 12:00 மணி EMD கடைசி தேதி: 30.03.2026 மாலை 5:00 மணி வரை

விற்பனையின் விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு http://omkaraarc.com/auction.php இல் கொடுக்கப்பட்டுள்ள இணைப்பைப் பார்க்கவும்.

விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்:

1. OARPL இன் அங்கீகரிக்கப்பட்ட சேவை வழங்குநராான M/s.C-1இந்தியா பிரைவேட் லிமிடெட், குர்கான் மூலம் ஏலம் 'ஆன்லைனில்' நடத்தப்படும். ஆன்லைன் மின்-ஏல ஏலப் படிவம், பிரகடனம், ஆன்லைன் ஏல விற்பனையின் பொது விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் அடங்கிய மின்-ஏல டெண்டர் ஆவணம் https://www.bankeauctions.com என்ற இணையதளத்தில் ஆதரவு அஞ்சல் ஐடி. support@bankeauctions.com ஆதரவு மொபைல் எண் +91-7291981124/25/26) கிடைக்கும்.
2. EMD - ஐ டெபாசிட் செய்து, உள்நுழைவு ஐடி மற்றும் கடவுச்சொல்லை உருவாக்குதல், தரவைப் பதிவேற்றுதல், ஏலத்தைச் சமர்ப்பித்தல், மின்-ஏல செயல்முறை குறித்த பயிற்சி போன்றவற்றில் உதவி தேவைப்படும் ஏலதாரர்கள், மின்-ஏல சேவை வழங்குநரான "M/s. C1இந்தியா பிரைவேட் லிமிடெட்", தொலைபேசி எண். ஐத் தொடர்பு கொள்ளலாம். உதவி எண்: +91-7291981124/25/26, உதவி எண் மின்னஞ்சல் ஐடி: support@bankeauctions.com, இரு. பவிக் பாண்டியா, மொபைல்: 8866682937 மின்னஞ்சல் maharashtra@c1india.com.
3. சொத்து தொடர்பான ஏதேனும் விளவல்கள் அல்லது சொத்து அட்டவணையை ஆய்வு செய்ய, ஆர்வமுள்ள நபர் சம்பந்தப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியை தொடர்பு கொள்ளலாம்: **அனிகேத் ஜோஷி (மொபைல் எண். 9869026887 (மின்னஞ்சல் ஐடி aniket.joshi@omkaraarc.com) & அக்ஷய் ஷா (மொபைல் எண். 9833505891) (மின்னஞ்சல் ஐடி akshay.shah@omkaraarc.com)** அல்லது வேலை நாட்களில் அலுவலக நேரங்களில் மேலே குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில்.
4. அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியின் சிறந்த அறிவு மற்றும் தகவலுக்கு, மேலே உள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளதைத் தவிர, எந்தவொரு சொத்திலும் அறியப்பட்ட வில்லங்கம் இல்லை.
5. **அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியின் சிறந்த அறிவு மற்றும் தகவலுக்கு, அறியப்பட்ட வில்லங்கம் பின்வருமாறு: அ)** வணிக விற்பனை வரித் துறை, குறிப்பிட்டுள்ளபடி நிலுவையில் உள்ள ரூ.2,89,82,142/- வரிக்கு, பொருள் சொத்தின் மீது ஒரு வில்லங்கத்தை உருவாக்க துணைப் பதிவாளர் அலுவலகத்திற்கு ஒரு கோரிக்கை கடிதத்தை அனுப்புகிறது. இதில், சொத்தின் மீது அறியப்பட்ட வில்லங்கம் எதுவும் இல்லை. இருப்பினும், ஏலத்தில் பங்கேற்க விரும்பும் ஏலதாரர்கள், ஏலத்தில் விடப்பட்ட சொத்துக்களின் உரிமை மற்றும் சொத்தின் மீதான நடந்து வரும் வழக்குகள், உரிமைகோரல்கள்/உரிமைகள்/பாக்கிகள் குறித்து, தங்கள் ஏலத்தை சமர்ப்பிப்பதற்கு முன், தங்கள் சொந்த சுயாதீன விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும். பொது ஏல விளம்பரம் OARPL இன் எந்தவொரு உறுதிமொழியையும் அல்லது பிரதிநிதித்துவத்தையும் உருவாக்கவில்லை மற்றும் உருவாக்குவதாகக் கருதப்படாது. OARPL க்கு தெரிந்த அல்லது தெரியாத அனைத்து தற்போதைய மற்றும் எதிர்கால வில்லங்கங்களுடனும் சொத்து விற்கப்படுகிறது.

சட்டப்பூர்வ வட்டி (அமலாக்க) விதிகள், 2002 இன் விதி 8(6) உடன் சேர்த்து படிக்கப்பட்ட விதி 9(1) இன் கீழ் விற்பனைக்கான சட்டப்பூர்வ அறிவிப்பு.

இந்த அறிவிப்பு, மேற்கூறிய கடன் கணக்கின் கடன் வாங்குபவர்/உத்தரவாததாரர்களுக்கு, 2002 இன் பாதுகாப்பு வட்டி (அமலாக்க) விதிகள், விதி 8(6) & 9(1) மற்றும் நிதி சொத்துக்களின் பத்திரமயமாக்கல் மற்றும் மறுகட்டமைப்பு மற்றும் பாதுகாப்பு வட்டி அமலாக்கச் சட்டம், 2002 இன் விதிகளின் கீழ் பதினைந்து (15) நாட்களுக்குள் கட்டாய அறிவிப்பாகும், இது மேலே குறிப்பிடப்பட்ட தேதி மற்றும் நேரத்தில் பொது ஏலம் மூலம் விற்பனையை நடத்துவது குறித்து அவர்களுக்குத் தெரிவிக்கிறது. பணம் செலுத்தத் தவறினால், அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி/பத்திரக் கடன் வழங்குபவரின் விருப்பப்படி, 2002 ஆம் ஆண்டு பாதுகாப்பு வட்டி (அமலாக்க) விதிகளின் விதி 8 (5) இன் கீழ் பரிந்துரைக்கப்பட்ட எந்தவொரு முறையிலும் சொத்து விற்கப்படும்.

Sd/-
தேதி: 11.03.2026 அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி,(ஓம்காராஅசெட்ஸ் ரீகன்ஸ்ட்ரக்ஷன் பிரைவேட் லிமிடெட்
இடம்: மும்பை (ஓம்காரா PS 25/2019-20 அறக்கட்டளையின் அறங்காவலராக அதன் இறனில் செயல்படுகிறது)

SURYODAY குரியோதய் ஸ்மால் ஃபைனான்ஸ் வங்கி லிமிடெட்

பதிவு செய்யப்பட்ட அலுவலகம்: 1101, சாரதா டெரஸ், பிளாட் 65, செக்டர் 11, சிபிடி பேலாபூர், நவி மும்பை - 400614 காா்ப்பரேட் அலுவலகம்: சீஷெல்ஸ் இரண்டாவது சென்ட்ரல், பிலாட் 1 விங் சி பிளாட் ஆர்-1, செக்டர் 30, சீஷெல்ஸ் ரமேஷ் நிவாஸ், நெருல், நவி மும்பை 400706. CIN: L65923MH2008PLC261472

வெளியீட்டு அறிவிப்பு: வேண்டுமென்றே கடனைத் திருப்பிச் செலுத்தாதவர்களின் புகைப்படங்கள்

கடன் வாங்கியவரின் பெயர்: முத்துக்குமார் எம்
முகவரி: 20/1279 6ஆவினாசி நகர், திருப்பூர் திருப்பூர் Tn641602

இணை கடன் வாங்கியவரின் பெயர் 1: ரித்து வர்ஷினி எம்
முகவரி: 97/95 திருநீலகதர் தெரு பொள்ளாச்சி, பொல்லா TN-642001

கடன் வாங்கியவரின் பெயர்

முத்துக்குமார் எம்

இணை கடன் வாங்குபவர்

ரித்து வர்ஷினி எம்

திரு/திருமதி முத்துக்குமார் எம் எங்கள் வங்கியிடமிருந்து LAP தயாரிப்புடன் ரூ. 28,80,000/- (ரூபாய் இருபத்தெட்டு லட்சத்து எண்பதாயிரம் மட்டும்) கடன் வரம்புடன் அனுமதிக்கப்பட்டார். தற்போதைய நிலுவைத் தொகை ரூ.31,30,278/- (ரூபாய் முப்பத்தொரு லட்சத்து முப்பத்தாயிரத்து இருநூற்று எழுபத்தெட்டு மட்டும்) மற்றும் வங்கிக்கு செலுத்த வேண்டிய நிலுவைத் தொகையை திருப்பிச் செலுத்தாதது. கணக்கு 04.07.2025 அன்று NPA ஆக அறிவிக்கப்பட்டது. வங்கியால் பல அறிவிப்புகள்/நடவடிக்கைகள் எடுக்கப்பட்ட போதிலும் கடன் வாங்குபவர்/இணை கடன் வாங்குபவர்(கள்) வங்கிக்கு செலுத்த வேண்டிய நிலுவைத் தொகையை திருப்பிச் செலுத்தவில்லை. கடன் வாங்குபவரும் அவரது இணை கடன் வாங்குபவர்(கள்) வங்கியால் கடனைத் திருப்பிச் செலுத்தாதவர்களாக அறிவிக்கப்பட்டு, அவர்களின் பெயர் பொதுத் தகவலுக்காக கடன் தகவல் நிறுவனங்களுக்கு அறிவிக்கப்பட்டது.

எஸ்டி/-
சிசிஆர்ஒ. நவி மும்பை

Protium புரோட்டியம் ஃபைனான்ஸ் லிமிடெட் (முன்னாள்குரோத் சோர்ஸ் ஃபைனான்சியல் டெக்னாலஜிஸ் லிமிடெட்)

பதிவுசெய்யப்பட்ட & கார்ப்பரேட் அலுவலக முகவரி: 7வது தளம், பிளாக் B2, கட்டம் - 1 நிர்வான் நாலெட்ஜ் பார்க், பஹாடி கிராமம், மேற்கு எக்ஸ்பிரஸ் நெடுஞ்சாலைக்கு வெளியே, காமா தொழில்துறை எஸ்டேட், கோரேகான் (இ), மும்பை- 400063, மகாராஷ்டிரா.

உடைமை அறிவிப்பு- (U/S 13(4) & பாதுகாப்பு வட்டி அமலாக்க விதிகள், 2002 இன் விதி 8(1) உடன் படிக்கப்பட்ட இணைப்பு IV இன் படி)

கீழே கையொப்பமிடப்பட்டவர், புரோட்டியம் ஃபைனான்ஸ் லிமிடெட்டின் முன்னாள் குரோத் சோர்ஸ் ஃபைனான்சியல் டெக்னாலஜிஸ் லிமிடெட் (இனிமேல் "புரோட்டியம் ஃபைனான்ஸ் லிமிடெட்" என்று குறிப்பிடப்படுகிறது) அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியாக இருப்பதால், நிதி சொத்துக்களின் பத்திரமயமாக்கல் மற்றும் மறுகட்டமைப்பு மற்றும் பாதுகாப்பு வட்டி அமலாக்கச் சட்டம், 2002 (சட்டம் எண். 54, 2002) ("சாரஃபேசி சட்டம்") விதிகளின் கீழ், மற்றும் பாதுகாப்பு வட்டி (அமலாக்க) விதிகள், 2002 இன் விதி 3 உடன் படிக்கப்பட்ட பிரிவு 13(12) இன் கீழ் வழங்கப்பட்ட அதிகாரங்களைப் பயன்படுத்தி, **ஜனவரி 2, 2026 அன்று ஒரு கோரிக்கை அறிவிப்பை வெளியிட்டார், கடன் வாங்கியவர்கள் லட்சுமி ஸ்டோர்ஸ் அதன் உரிமையாளர் ராமன் பரிமளம் மூலம் மற்றும் இணை கடன் வாங்குபவர்கள்: 1. ராமன் பரிமளம் எஸ்/ஒ ராமன், 2. GS021EE21653380 என்ற எண் கொண்ட கடன் கணக்கைப் பொறுத்தவரை, வரலட்சுமி, ராமன் பரிமளம் என்பவரிடம், 2 ஜனவரி 2026 அன்று, மேற்படி அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள INR 46,09,780.54/- (நாற்பத்தாறு லட்சத்து ஒன்பதாயிரத்து எழுநூற்று எண்பது ரூபாய் ஐம்பத்து நான்கு பைசா மட்டும்)** தொகையை, மேற்படி அறிவிப்பு பெறப்பட்ட நாளிலிருந்து 60 (அறுபது) நாட்களுக்குள் திருப்பிச் செலுத்த வேண்டும்.கடன் வாங்கியவர்கள் குறிப்பிட்ட தொகையை திருப்பிச் செலுத்தத் தவறியதால், **மார்ச் 11, 2026 அன்று, 2002** ஆம் ஆண்டு பாதுகாப்பு வட்டி (அமலாக்க) விதிகளின் விதி 8 உடன் படிக்கப்பட்ட சட்டத்தின் பிரிவு 13(4) இன் கீழ் வழங்கப்பட்ட அதிகாரங்களைப் பயன்படுத்தி, கீழே கையொப்பமிட்டவர் கீழே விவரிக்கப்பட்டுள்ள சொத்தை குறியீட்டு ரீதியாக உடைமையாக்கியுள்ளார் என்று கடன் வாங்கியவர்களுக்கும் பொதுமக்களுக்கும் இதன் மூலம் அறிவிப்பு வழங்கப்படுகிறது.

குறிப்பாக கடன் வாங்கியவர்களுக்கும் பொதுவாக பொதுமக்களுக்கும் மேற்கூறிய சொத்தை கையாள வேண்டாம் என்று இதன் மூலம் எச்சரிக்கப்படுகிறது. மேலும் சொத்துடனான